**வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

**பெறுகைகளுக்கான அறிவித்தல் (2024/05)**

**சுத்திகரிப்பு சேவைகளுக்கான பெறுகை – 2024 /2025.**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. தேவையான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | சுத்திகரிப்பு சேவை |
|---|---|
| குறியீட்டு இலக்கம் | NP/21/05/Pro/Clean/2024-2025 |
| வியாபாரப் பதிவு | சுத்திகரிப்பு சேவைப் பதிவு |
| பெறுகைப்பிணை | ரூபா 735,000.00 |
| மீளளிக்கப்பட முடியாத வைப்பு | ரூபா 12,500.00 |

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம் பெறலாகாது என்பதுடன் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியிலே வேலை நாட்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 15.00 மணி வரை பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, **யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாட்களில் **06 ஆகஸ்ட் 2024** ஆம் திகதி தொடக்கம் **26 ஆகஸ்ட் 2024** ஆம் திகதி வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் மேலே குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத வைப்புத்தொகையினை காசாகச் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் **27 ஆகஸ்ட் 2024** ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலை மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைக்கு முன்னரான கூட்டம் மாநாட்டு மண்டபம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 12.08.2024 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நடைபெறும்.
8. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் தொடர்பாக இறுதித் தீர்மானம்எடுக்கும்உரிமை கேள்விச் சபைக்கு உண்டு.
9. This advertisement is available in English language in our website www.np.gov.lk


..............................

**Dr. V.P.S.D. Pathirana**
MBBS, PGD... (Com.Med),
Prov... ...th S...

வைத்திய கலாநிதி.V.P.S.D.பத்திரண.
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பெரிது),**
வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், 40000.

தொலைபேசி இலக்கம்: 021-222-0811 021-222-0812 தொலைநகல்: 021-221-7905, 021-222-0818
மின்னஞ்சல்: capdhsnp@gmail.com